**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**Case No.** **STC.No.842/2022**

Deposition of **PW–1/ LW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | நிஷாந்த் | **Age** | : | 24 |
| **Father's / Husband Name** | : | சிவமுருகன் | **Religion** | : | இந்து |
| **Village** | : | போடிநாயக்கனூர் | **Calling** | : | தனியார் ஊழியர் |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **15 day August 2025**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>**

1)நான் தற்சமயம் போடிநாயக்கனூரில் தனியார் ஊழியராக இருந்து வருகிறேன். கடந்த 02.11.2021 ஆம் தேதி காலை 05.30 மணிக்கு எனது பாட்டிக்கு வயிற்று வலி என்பவதால் தொக்கு எடுப்பதற்காக கீழ தெருவில் பார்க் பக்கத்தில் இருச்சக்கர வாகனத்தில் அழைத்து சென்றேன். அங்கு பாட்டிக்கு தொக்கு எடுத்து விட்டு மீண்டும் இருச்சக்கர வாகனத்தில் பெரியாண்டவர் ஹை ரோட்டில் கிழக்கே இருந்து மேற்கு நோக்கி போடி பஸ் ஸடாண்ட் அருகே வந்த போது எனக்கு பின்னால் 6733 என்ற நானோ கார் ஆனாது எனது இருச்சக்கர வாகனத்தில் பின்னால் மோதியது நானும் எனது பாட்டியும் வண்டியில் இருந்து கீழே விழுந்து விட்டோம். எனது பாட்டிக்கு இடுப்பிலும் தலையிலும் காயங்கள் ஏற்பட்டது. எனக்கு கால் முட்டியிலும் பாதத்திலும் காயங்கள் ஏற்பட்டது.

2)அப்போது அங்கு வந்த பிரபாகரன், ஆண்டிச்சாமி இருவரும் எதிரி ஓட்டி வந்த நானோ காரில் என்னையும் எனது பாட்டியையும் போடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர் ஆஜர் எதிரிதான் நானோ காரை ஓட்டி வந்து எனது இருச்சக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினார். அதன்பிறகு நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து வந்து

காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது. புகாரை நான் தான் எழுதினேன். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது )** போலீசார் என்னை விசாரித்தனர்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1)எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2025.09.15 17:31:03 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**